8-5-1995

# ★ விரைவில் அவசரகால நிலை பிரகடனம்?

விலை ரூபா 5.00

# ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 சித்திரை 25 இதழ் 93
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 8 - 5 - 1995

## சண்டே ரைம்ஸ் தகவல்

[கொழும்பு]
அரசு இலங்கை முழுவதும் அடுத்த சில நாட்களில் அவசர காலநிலை பிரகடனம் செய்யக்கூடும் என்று சண்டே ரைம்ஸ் தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைப்புகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்ற செய்திகளால் இந்த நடவடிக்கை எடுக்கப்படலாம் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தற்போது எழுந்துள்ள புதிய நெருக்கடியால் கொழும்புக்கு ஏற்படக்கூடிய அபாயம் குறித்து பெருத்த அச்சம் நேற்றைய கொழும்பு பத்திரிகைகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன,

## புலிகளிடம் ஏவுகணை இந்தியா ஆராய்வு

[கொழும்பு]
சென்ற வார இறுதியில் யாழ்ப்பாணத்தில் இரு அவ்ரோ விமானங்களை சுட்டு வீழ்த்திய விடுதலைப் புலிகள் பயன்படுத்திய ஏவுகணைகள் எப்படிப்பட்டவை. எங்கிருந்து வந்தவை என்பதைக் கண்டு பிடிக்க இந்திய பாதுகாப்பு அமைப்புக்கள் தீவிரமாக முயன்று வருகின்றன என்று சண்டே ஐலன்ட் கட்டுரையொன்றில் தெரிவிக்கப்பட்
(5-ம் பக்கம் பார்க்க)

## ★ திருமலை மாவட்டத்தில்

# புலிகளின் இரு தாக்குதல்களில்

# ஏழு இராணுவத்தினர் உயிரிழப்பு!

(திருமலை)
**திருகோணமலை மாவட்டத்தில் நேற்றும் நேற்றுமுன்தினமும் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய இருவேறு அதிரடித் தாக்குதல்களில் ஏழு இராணுவத்தினர் பலியானார்கள். பலர் காயமடைந்துள்ளனர்.**

திருமலை புல்மோட்டை தெற்குப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை விடுதலைப் புலிகள் நடத்திய திடீர் அதிரடித் தாக்குதலில் ஆறுபடையினர் கொல்லப்பட்டனர்.
சுமார் இருபது நிமிட நேரம் இத்தாக்குதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை திருமலையின் வடமேற்கு பகுதியில் படையினரின் பாதுகாப்பு கண்காணிப்பு நிலையம் மீது விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை 7,30 மணிக்கு நடத்திய தாக்குதலின்போது படை
(6-ம் பக்கம்பார்க்க)

## யாழ். குடாவில் படையினர் நிலை நாளுக்குநாள் மோசமடைகிறது

(புதுடில்லி)
யாழ். குடாவில் உள்ள இராணுவ முகாம்களில் நிலை கொண்டுள்ள 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட படையினரின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வருவதாக பி. ரி, ஐ. செய்தி நேற்று தெரிவித்தது.

அச்செய்தி மேலும் தெரிவிக்கையில் இலங்கை விமானப்படையின் இரு அவ்ரோ விமானங்கள் விடுதலைப் புலிகளினால் அண்மையில் சுட்டு
(5ம் பக்கம் பார்க்க)

## பலாலி, பூநகரி இராணுவத்தினர் அரசாங்கத்தின் மீது கடும் சீற்றம்

(மணிலா]
தமிழீழ விடுதலைப்புலிகள் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் மீது தாக்குதல் நடத்தியதை அடுத்து விமானங்கள் மூலம் பூநகரி, பலாலி முகாம்களுக்கு படையினர் வந்து இறங்குவது தடைப்பட்டுள்ளதால் இம் முகாம்களில் உள்ள ஆயிரக்கணக்கான படையினர் சறிலங்கா அரசு மீது ஆத்திரம் கொண்டுள்ளதாக இராணுவ வத்தளபதி ஒருவர் தெரிவித்துள்ளதாக வெரித்தாஸ் தெரிவித்தது.

யாழ்ப்பாணத்திற்கு எதி
(5ம் பக்கம் பார்க்க)

## "பலாலி முகாமில் தற்போது சம்பலும் சோறும்தான் சாப்பாடு"

### இராணுவ அதிகாரி கவலை

(கொழும்பு)
கடந்த ஒரு வாரகாலமாகப் பலாலி இராணுவ முகாம் படையினருக்கு பருப்பும் சோறும் சம்பலும் தான் சாப்பாடாக வழங்கப்பட்டு வருகின்றது என்று அங்குள்ள அதிகாரி தெரிவித்தாக செய்தியாளர் அமல் ஜெயசிங்க பி. பி.சி சந்தேசியாவுக்கு தெரிவித்தார்.

அவர் மேலும தெரிவிக்கையில்; விடுதலைப் புலிகள் இரு அவ்ரோ விமானங்களைச் சுட்டு வீழ்த்திய பின்பு வடபகுதி முகாம்களுக்கு உணவுப்
(5-ம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவிலும் அதிரடி 2 இராணுவம் உயிரிழப்பு

### ஆயுதங்களும் மீட்பு

(முல்லைத்திவு)
முல்லை மாவட்டம் தென்னை மரவாடியில் கடந்த 5ம் திகதி ரோந்து வந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் திடீர் அதிரடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

மாலை 5 55 மணியளவில் ஆரம்பித்த இந்த தாக்குதல் 5 நிமிடங்களே நீடித்தது. இத்தாக்குதலில் இரண்டுக்கும் அதிகமான இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன்
(6-ம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டையில் இராணுவம் சுட்டு நான்கு முஸ்லிம்கள் பலி!

(கொழும்பு)
புல்மோட்டைப் பகுதியில் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து இப்பகுதியிலுள்ள முஸ்லிம்கள்மீது இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 4 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள முஸ்லிம்கள் புலிகளின் ஆதரவாளர்களாக செயல்படுவதாகசந்தேகிக்கும் இராணும இந்த முஸ்லிம்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் நஜீத் மஜீத் தெரிவித்துள்ளார். (ரி)

## 12 ஏவுகணைகளை புலிகள் வாங்கினர்

### சண்டே ரைம்ஸ்

(கொழும்பு)
தரையிலிருந்து விண்ணில் ஏவப்படும் ஏவுகணைகள் குறைந்தது பன்னிரண்டை விடுதலைப் புலிகள் இலங்கையில் இந்திய அமைதிப்படை இருந்தபொழுது வாங்கியதாக சண்டே ரைம்ஸ் இராணுவத்துறை செய்தியாளர் இக்பால் அத்தாஸ் தெரிவித்துள்ளார்.

1987ம் ஆண்டு இந்திய விமானங்கள் மீது இரண்டு ஏவுகணைகள் செலுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

சன்டே லீடர் கட்டுரையாளர் டி. பி. எஸ். ஜெயராஜ்
(5-ம் பக்கம் பார்க்க)

# பனைவளத்தின் உச்சப் பயன்பாட்டை பெறவேண்டும்

(உடுவில்)

பனைசார் தொழில்களில் போதிய பயிற்சியும் நிபுணத்துவமும் நம்மிடையே பேணப்படவேண்டும். எமது பிரதேசத்தில் உள்ள சகல வளங்களையும் நன்கு பயன்படுத்தி அதிலிருந்து உச்சப்பயன்பாட்டை பெறுவதன் மூலம் எமது சுதந்திர தேசத்துக்கான பொருண்மிய அடித்தளம் அமைக்கப்படவேண்டும்.

மாசியப்பிட்டி மறுமலர்ச்சி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வைபவமொன்றில் பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. தி. சபாரட்ணம் மேற்கண்டவாறு கூறினார்.

மாசியப்பிட்டி கிராமத்தில் சுன்னாகம் இலங்கை வங்கி கிளையினரால் இனம் காணப்பட்டு சுயமுயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் கடன்பெற்ற சுளகு பின்னும் முப்பது பயனாளிகளும் தென்னை-பனை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இவ்வைபவத்திலேயே கூட்டுறவு உதவி ஆணையாளர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்ல பனைவளம் உண்டு. இதன் மூலம் பெறப்படும் அனைத்துப் பனைசார் தொழில்களையும் திட்டமிட்டு வளர்க்க வேண்டும். அதன்மூலம் எதிர்கால எமது சந்ததியினருக்கு நல்லதொரு பொருளாதார அடித்தளத்தை எம்மால் அமைத்துக்கொடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார். 109-சி

# 'சுயநிர்ணய உரிமைக்காகவே நாம் இன்று போராடுகிறோம்'

## — டொமினிக் உரை

[யாழ்ப்பாணம்]

தமிழ் தேசிய இனம் இழந்த தனது சுயநிர்ணய உரிமைகளை வென்றெடுப்பதற்காகவே இன்றைய போராட்டம் நடைபெற்று வருகின்றது. எமது பொருளாதார வளர்ச்சியில் சிங்கள அரசு அக்கறை காட்டவில்லை. மற்றைய பிரதேசங்களை விட எமது பிரதேசம் பொருளாதார ரீதியில் பின்தள்ளப்பட்டிருக்கிறது. எமது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றநிர்மாணி நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு வெளியீட்டுரை நிகழ்த்திய தமிழீழ நிர்வாகசேவைகள் பொறுப்பாளர் திரு. டொமினிக் தனது உரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழீழ நிர்வாகசேவை பொறியியல் பிரிவினரால் வெளியிடப்பட்ட இந்நூல் வெளியீட்டுவிழா பொறியியல் துணைப் பொறுப்பாளர் செல்வி புதியவள் தலைமையில் நடைபெற்றது. இவ் விழாவில் தேசியக் கொடியை யாழ். மாவட்ட நிர்வாக சேவைகள் பொறுப்பாளர் திரு. மாறன் ஏற்றிவைத்தார்.

திரு. டொமினிக் தொடர்ந்து பேசுகையில்: அரசுடனான பேச்சுக்களில் நாம் நான்கு கோரிக்கைகளை முன்வைத்தோம். இந்த நான்கு கோரிக்கைகளும் எமது பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சி சம்பந்தமானதாகும். ஆரம்பத்தில் அரசு எம்முடன் பேச்சுக்களை ஆரம்பித்தபொழுது வடக்குக் கிழக்கின் அபிவிருத்தி சம்பந்தமாகவே ஆலோசிக்கப்பட்டது. அரசு பின் தனது அந்த நிலையில் இருந்து விடுபட்டு கிழக்கை ஒருபுறம் தள்ளிவிட்டு வடக்கைப் புனரமைப்புச் செய்வோம் எனக் கூறியது. இதன் பின் மூன்றுவது முறையாக வடக்கின் புனரமைப்பைப் பின்தள்ளிவிட்டு யாழ் மாவட்டத்தைப் புனரமைப்புச்செய்வோம் என்றது. தொடர்ந்து அரசு தனது அந்த நிலையில் இருந்து பின்வாங்கி யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளை அவசர புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்கலாம் என்றது. இப்படியாக முறைக்குமுறை தமது வாக்குறுதிகளிலிருந்து மாறிக் காலத்தை கடத்தி வந்தது.

எமது பிரதேசம் பல வகை வளங்களைக் கொண்டது. இந்த வகையான வளங்களைப் பயன்படுத்தி எமது பொருளாதாரத்தை நாம் மேம்படுத்திக் கொள்ளவேண்டும். நாம் எமது பிரதேசத்தில் சுதந்திரமாகவும் சுயநிர்ணய உரிமையோடும்வாழவேண்டும். இதற்காகஎமதுபொருளாதாரத்தில் நாம் தன்நிறைவு பெறவேண்டும் என்றார். 162-ரி-சி

# மத்திய வங்கியில் பதவிவெற்றிடங்கள்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியில் எழுதுவினைஞர்/உதவி - காசாளர் பதவிக்கும் பதவி நிலை உத்தியோகத்தர் (Staff Class) பதவிக்கும் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிகளுக்கான விண்ணப்ப முடிவு திகதி மே மாதம் 25ம் திகதியாகும். இது தொடர்பானபத்திரிகைவிளம்பர அறிவித்தலையும் மாதிரி விண்ணப்பப் படிவத்தையும் 'ஈழநாடு' அலுவலகத்தில் காரியாலய நேரத்தில்பார்வையிடலாம்.

எழுதுவினைஞர் / உதவி காசாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப்பரீட்சை யாழ்ப்பாணத்திலும் நடைபெறவுள்ளது. பதவி நிலை உத்தியோகத்தர் (Staff Class) பதவிக்கான போட்டிப் பரீட்சை கொழும்பில் மட்டும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ஷெல் தாக்குதல்

(அரியாலை)

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை 8-00 மணியளவில் காரை நகரிலிருந்து மூளாயை நோககியும் அராலிச் சந்தியிலிருந்து அராலி குடிமனைகளை நோக்கியும் மண்டைதீவு காவலரணிலிருந்து பண்ணை கடலோரப் பகுதிகளை நோக்கியும் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாக தெரிய வருகின்றது. 59

# அரங்கப் போட்டி

(ஆனைப்பந்தி)

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக தீவகப் பிரிவினால் கரும்புலிகள் நாளையொட்டி அரங்கப் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன,

தீவகக் கோட்ட நீதியாக நடாத்தப்படவுள்ள இப் போட்டிகள் இம் மாதம் 20ம் திகதிக்கும் 30ம் திகதிக்கும் இடையில் நடைபெறுமென தீவக கலை பாண்பாட்டுக் கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 101

# இராசி பலன்

08-05-1995

திங்கட்கிழமை

(தமிழுக்கு சித்திரை-25)

அட்டமி முற்பகல் 11-31 வரை, ஆயிலியம் பி.ப. 12-35 வரை, சித்தயோகம். இராகு காலம் காலை 7 25 முதல் 8-55 வரை சுபவேளை காலை 11-55 முதல் 1-25 வரை.

மேஷம்: வெளிவேஷம், மனநிலைபாதிப்பு, ஊதாசீனம்

இடபம்: ஆடம்பர செலவு தாயார் உதவி, காரியசித்தி

மிதுனம்: வாய்த்தர்க்கம். குறைகேட்டல், தொழில் நஷ்டம்

கடகம்; தொழில்சிறப்பு நண்பர்பெருமை விருந்துண்ணல்.

சிங்கம்: முதியோர் ஆசி. உடல் அசதி, குடும்பகவலை

கன்னி; வெளியூர் தகவல் நன்முயற்சி, பணப்புளக்கம்

துலாம்: சுபகாரியம், திருமணப்பேச்சு, மனநிறைவு,

விருச்சிகம்: அடாவடித்தனம், குடும்பவேற்றுமை, மறதி.

தனுசு: அகம்பாவம் தொழில் முரண்பாடு பிறர் ஏளனம்.

மகரம்: பயண நன்மை, பொதுப்பணி, பிறர்க்குதவுதல்.

கும்பம்: கலந்துரையாடல் மனைவிபுகழ் தியாகசிந்தை

மீனம்: குறுகியநோக்கம், அதிகாரிகள் சினம், அலைச்சல்.

- ஜோஸ்யர்

# வருடாந்த கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளதால் மன்றங்களின் பிரேரணைகள், செயல்பாடுகள் பற்றிய கருத்துக்களுடன்எதிர் வரும் 15ம் திகதி திங்கட்கிழமைக்கு முன் நல்லூர் சிவன் கோயில் முன்பாகவுள்ள பேரவைக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. 154

# புளியம்பொக்கணையில் சிறுகைத்தொழில் ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கு முகமாக புளியம் பொக்கணையைச் சேர்ந்த 21 பயனாளிகளுக்கு பப்பட உற்பத்திக்கென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் ஊக்குவிப்புக்களை வழங்கியுள்ளனர்.

நிறுவன கிராமிய உற்பத்திக் குழுப் பகுதியின் கிராமிய நிதியத்தின் மூலம் உற்பத்தியாளர் ஒருவருக்கு தலா 10,000 வீதம் இரண்டு லட்சத்து பத்தாயிரம ரூபா வழங்கப்பட்டது.

மேலும் அம்பாள் நகரில் உள்ள 20 குடும்பங்களுக்கும் சுயதொழில் ஊக்குவிப்புக்கென ஒருவருக்கு தலா 2,500 வீதம் 20 பேருக்கு மொத்தம் 50,000 ரூபா வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேவை அறிந்து மாத்திரம் மரங்களைத் தறிக்கவும்

(யாழ்ப்பாணம்)

இன்றைய போர் காரணமாக வன்னிப் பகுதியிலிருந்து நாளாந்தம தேவைக்கு வேண்டிய மரங்களைக் கொண்டு வரமுடியாது இருப்பதால் மக்கள் பெருமளவில் யாழ் குடாநாட்டினுள்ளேயே மரங்களைத் தறிக்கின்றனர். இது எமது குடாநாட்டை பாலைவனமாக்கக் கூடிய ஒரு செயல் என்பதை எம்மில் பலர் உணர்வதில்லை. இதை மனதில் கொண்டும் எமது மக்களின் விறகுத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடனும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்புப் பகுதி மரம் தறித்தலைக் கட்டுபடுத்துகின்றது. அப்படிக் கட்டுப்படுத்தியும் மக்கள் மரத் தேவையைச் சிக்கனப் படுத்தாமையால் கூடிய அளவில் மரங்கள் தறிக்கப்படுகின்றன என கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-05-08

திங்கள் இரவு

08-02 தளிர்கள்-சிறுவர்களுக்கான நிகழ்ச்சி
08-20 சமகாலப் பார்வை
08-30 செய்திகள்
08-40 தரிசனம் நிகழ்ச்சியில் தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் சு. த. சுப்பிரமணியம் சகோதரர்களுடனான செவ்வி

1995-05-09

செவ்வாய் காலை

07-02 மாவீரவணக்கம்
07-15 இன்றைய தாரகை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 தாயகப் பாடல்கள்

## தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-05-08

திங்கள் மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சிகீதம்
05-10 புதியவை
05-15 ஆழியமுதம்
05-30 மாணவர் பக்கம்
06-00 சிந்தனைக்குச் சில விடைகள்
06-02 நேயர் நெஞ்சம்
06-15 விளையாட்டுச் செய்திகள்
06-20 என் தெரிவு
06-30 நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# அறிவியல் கழகத்தில் இவ்வார வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவிலில் இயங்கும் மாணவர் அறிவியல் கழகத்தில் இந்த வாரம் நடைபெறும் வகுப்புகளின் விபரம் வருமாறு:

8-ம் திகதி திங்கள் மு. ப. 6-00 மணிககு ஆண்டு 10, 11 இணுவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் கணித செயல முறை வகுப்பு பி. ப. 3.00 மணிக்கு ஆண்டு 10 விஞ்ஞான செயலமுறை வகுப்பு பி. ப. 4.00 மணிக்கு ஆண்டு 10, 11 கேத்திரகணித செயல் முறை வகுப்பு.

9ம் திகதி செவ்வாய் மு. ப. 9.00 மணிக்கு ஓ. எல். ஆர், பாடசாலை விஞ்ஞான செயல் முறை வகுப்பு பி. ப. 3.00 மணிக்கு ஆண்டு 8 கேத்திர கணித செயலமுறை வகுப்பு.

10-ம்திகதிபுதன் பி.ப.3.00 மணிக்குஉறுப்பினர்கலந்துரையாடல் பி. ப. 4 00 மணிக்கு அறிவியல் விளக்கப் படம்.

11-ம் திகதி வியாழன் மு. ப. 9.00மணி க்கு ஆண்டு 11 யாழ் இந்துக் கல்லூரி மாணவர்கள் அறிவியல விளக்கப் படம் பி. ப. 3.00 மணிக்கு ஆண்டு 8 விஞ்ஞான செயல் முறை வகுப்பு

12-ம் திகதி வெள்ளி பி.ப. 3.00 மணிக்கு ஆண்டு 11 விஞ்ஞான செயல்முறை வகுப்பு பி. ப. 4.00 மணிக்கு ஆண்டு 10,11 க்கு செயலமுறை வகுப்பு.

13-ம்திகதி சனி மு.ப.10-00 மணிக்கு ஆண்டு9கணிதசெயல் முறை வகுப்பு பி. ப. 3.00 மணிக்கு ஆண்டு 9 விஞ்ஞான செயல்முறை வகுப்பு. -சி

# தென்னை நாற்றுகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கிளிநொச்சி சாந்தபுரம் அரை ஏக்கர் குடியிருப்பில் நடாத்தப்பட்ட கிராமியப் பாசறை நிகழ்வில் வைத்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் நல்லின தென்னை நாற்றுகள் மற்றும் பழமரக் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

இத்துடன் இப் பாசறை நிகழ்வில் கிராம மக்களின் அடிப்படைப் பிரச்னைகள் ஆராய்தல் மற்றும் நல்லின கடா விநியோகம், சுய தொழில் கடன் வழங்கல் போன்ற பல்வேறுபட்ட சமூக மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த கிராமத்தில் 20 குடும்பங்களுக்கு தலா 2500 ரூபா வீதம் 50,000 ரூபா வழங்கப்பட்டது.

# இறைச்சிக் கடைகள் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

இறைச்சிக் கழிவுகளை சுகாதாரத்திற்கு கேடு விளைவிக்கும் வகையில் பொதுஇடங்களில் வீசி எறிந்தமைக்காக முல்லை மாவட்டத்தில் மூன்று இறைச்சிக் கடைகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தவகையில் ஒட்டிசுட்டான் வட்டத்தில் முத்தையன்கட்டு, கற்சிலைமடு, ஒட்டிசுட்டான் ஆகிய பகுதிகளில் உள்ள மூன்று கடைகளை தற்காலிகமாக மூடிவைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் இவர்கள் மீது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் முல்லை மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன விலங்கு வேளாண்மைப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

### மணிவாக்கு

சபலம் பிச்சைக்காரனைப் போன்றது: ஒரு தடவை அதற்கு ஆதரவு காட்டிவிட்டால் போதும் திரும்பத் திரும்ப வரும் தன் நண்பர்களுடன்.

- எகிப்திய பழமொழி

# வடபகுதியில் படையினரின்முகாம்கள் எந்நேரமும் விடுதலைபுலிகளிடம்'வீழலாம்

(கொழும்பு]

வடபகுதியிலுள்ள முக்கிய படை முகாம்கள் எவ்வேளையிலும் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடையும் சாத்தியம் அதிகரித்து வருவதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

விமானப்படை விமானங்களின் நடமாட்டம் வடக்கு-கிழக்கில் முற்ருக முடக்கப்பட்டதைத் தொடர்ந்து படை முகாம்களின் வான்வழிப் பாதுகாப்பு அடியோடு இல்லாது போய்விட்டது. மேலும் வடபகுதி கடலில் கடற் புலிகளின் ஆதிக்கம் பெருமளவில் அதிகரித்து விட்டதால் கப்பல் நடமாட்டங்களும் பெருமளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் வடக்கில் உள்ள முக்கிய படைமுகாம்களுக்கான தொடர்புகள் துண்டிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில் படையினருக்கான ஆயுத விநியோகமும், உணவு விநியோகமும் தடைப்படும் ஆபத்து உள்ளது. இவற்றை புலிகள் தடுத்துவிட்டு வடக்கில் படைமுகாம்கள் மீது பாரிய தாக்குதலை தொடுப்பார்களேயானல் அவைவிரைவிலேயே புலிகளிடம் வீழ்ச்சியடைந்துவிடுமெனவும் இந்த ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் உடனடியாகவே விமானப் படையினர் நிலைமைகளை சமாளிக்கும்விதத்தில் தன்னை தயார் படுத்தி புலிகளின் தாக்குதல் களை முறியடிக்க முயலவேண்டுமெனவும் கூறியுள்ளனர். (சி)

## நமது நோக்கு

### வறுமை ஒழிப்பு

1995- வறுமை ஒழிப்பு ஆண்டு என தெற்காசிய ஒத்துழைப்பு அமைப்பு (சார்க்) அண்மையில் டில்லியில் நடாத்திய உச்சி மாநாட்டில் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

பிராந்திய ரீதியில் நாடுகள் ஒன்றுபட்டுச் செயற்படுவதன் அவசியம் வழமை போல இந்த மாநாட்டிலும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டின் முடிவுகளுள் இந்த நாடுகளுக்கிடையே பரிவர்த்தனை செய்யப்படும் சிலபொருட்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மாநாட்டுச் செய்திகள். பிரகடனங்கள், தீர்மானங்கள் எந்த அளவிற்கு வறுமையை ஒழிக்க உதவப் போகின்றன என்பது கேள்விக்குரியதே!

ஏனெனில்- பொருளாதாரத்தில் ஒத்துழைக்க வேண்டும் என ஓங்கிக் குரல் எழுப்பும் இந்த ஏழு நாடுகளின் அரசியற் செயற்பாடுகள், வறுமையை ஒழிக்க உதவுகின்றனவா?

உள்ளூர்க் கிளர்ச்சிகளை ஒடுக்கமுடியாது தவித்துக்துக்கொண்டு, பயங்கரவாதம் அயல் நாடுகளால் தூண்டப்படுகின்றதுஎன்ற குற்றச்சாட்டுகளை எழுப்புவதும், ஆயுத பலத்தை வளர்த்துஎப்படியெல்லாம் மேலாண்மை பெற்றுவிடலாம் என்று சிந்தித்துக் கொண்டுமிருந்தால் வறுமை ஒழியுமா?

பயங்கரவாதம் தூண்ட உதவும் நாடு என்று குற்றம் சாட்டிவிட்டு பின்னர் அதே நாட்டிடம் பயங்கரவாதம் ஒழிக்கப் பொருளாதார, இராணுவ உதவிகள் கோரும் வேடிக்கையான நிகழ்ச்சிகள் இந்தப் பிராந்தியத்திலேதான் நடக்கின்றன.

பாதுகாப்புக்கு எனக் கூறிக்கொண்டு, எடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளால், உயிரிழப்புக்கள், இடம்பெயர்வுகள், விவசாயக் காணிகள் பாதிக்கப்படல், தொழில்கள் சீரழிதல், சொத்துக்கள் நாசமாதல் ஆகியன தொடர்வதைத் தடுக்காது, மாநாடு கூடி வறுமை ஒழிப்போம் என முழக்கமிடுவதாற் பயனில்லை.

அது மாத்திரமல்ல-இராணுவ நடவடிக்கைகளுக்கு எண்ணெய்ஊற்றி ஆதரித்துக்கொண்டு வறுமை ஒழிப்பு என்று கூறுவதெல்லாம் புறக்குடத்தில் ஊற்றிய நீராகும் என்பதை நினைவுபடுத்துகிறோம்!

# கடற்படைக்கு 5 ரோந்துப் படகுகளை 'டொக்யாட்' அமைத்து வருகிறது

(கொழும்பு)

கொழும்பு 'டொக்யார்ட்' நிறுவனம் இலங்கை கடற்படைக்காக இரு அதிவேக அலுமினிய ரோந்துப் படகுகளை கட்டி வருகிறது. கடற்படைக்காக மூன்று பெரிய ரோந்துப் படகுகளை அமைக்கும் வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இலங்கை பிராந்திய கப்பல் போக்குவரத்து கேந்திரமாக விளங்கக்கூடிய வாய்ப்பிருப்பதாக உலக கப்பல் போக்குவரத்து தொழிலில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனமான 'லொயிட்ஸ்' தெரிவித்துள்ளது.

கப்பல் போக்குவரத்து தாராளமயப்படுத்தப்படுவதும் நகல் கப்பல் போக்குவரத்துக் கொள்கைகளையும் தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையின் முக்கிய துறைமுகம் உயர்ந்ததரத்தைபேணுவதற்கு வழி வகுக்கும். புதிய கப்பற் போக்குவரத்து கொள்கை இந்த தொழிலில் சம்பந்தப்பட்டுள்ள சகல தரப்புகளோடும் விவாதிக்கப்படவுள்ளது.

கொழும்பு 'டொக்யாட்' நிறுவனம் உரிய காலத்தில் பணிகளை பூர்த்தி செய்யும் வகையில் அதன் தேவைகளை சிரமைத்துள்ளது. இதனல் கூடுதலான கப்பல்கள் பழுது

(5-ம் பக்கம் பார்க்க)

### மாணவர் எழுச்சி நாள் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாணவர் எழுச்சி நாள் 1995 தொடர்பாகபாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று மருதங்கேணி கல்விக்கோட்டத்திற்கு பி. பகல் 3-00மணிக்கு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் மாணவ முதல்வர்களுக்கான கலந்துரையாடல் யாழ்ப்பாண கல்விக்கோட்டத்திற்கு இன்று மு. பகல் 9மணிக்கு நாவலர் மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது, கே-சி

# விமான எதிர்ப்பு தாக்குதலை முறியடிக்க விமானப் படையினர் தயாராகின்றனர்

(கொழும்பு)

யாழ்ப்பாண வான்பரப்பில் இரு அவ்ரோ விமானங்கள் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு காரணம் ஏவுகணைத்தாக்குதலா? அல்லது விமான எதிர்ப்பு பீரங்கி வேட்டா? என்பது பற்றி தொடர்ந்தும் விமானப்படையின் உயர்மட்டம் விசாரணைகளை நடாத்தி வருகிறது.

சுட்டு வீழ்த்தப்பட்ட அவ்ரோ விமானங்களை வெப்பத்தை நாடிச்சென்று தாக்கும் ஏவுகணை தாக்கியதா! அல்லது ராடர் மூலமாக கணிப்பிட்டு சுடப்படும்விமான எதிர்ப்பு பீரங்கிவேட்டுக்கள் தாக்கினவா? என்பது பற்றி தீவிரமாகத் தற்போது ஆராயப்படுவதாக விமானப் படைத்தளபதி ஏயர் மாஷல் ஒலிவர் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் எதிர்கால விமான எதிர்ப்பு நடவடிக்கைகளை முறியடிக்கும் வகையில் விமானப்படை விமானங்களைத் தயார்படுத்துவது பற்றியும் விரிவாக ஆராயப்படுவதாகவும் விமானப் படைத் தளபதி தெரிவித்தார்.

அடுத்தடுத்து 24 மணிநேரத்துள் இடம்பெற்ற விமான தாக்குதல் சம்பவங்கள் விமானப் படையினரிடையேபெரும் அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்ட போதும் தற்போது நிலைமைகளை சுதாகரித்து எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ள விமானப்படையினர் தயாராகி வருவதாகவும் அவர் தெரிவித்தார். சி

### ஹபரண வருகின்றது

(அரியாலை)

திருகோணமலையிலிருந்து 1000 மெற்றிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு ஹபரண கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகம் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தில் மூன்று கப்பல்களில் உணவு மற்றும் மருந்துப் பொருட்கள், விவசாயப் பொருட்கள் ஆகியன ஏற்றப்படுவதாகவும் துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

-59-சி

## பலதும் பத்தும்

### தாமிரச் சத்து

இரத்தத்தில் சிவப்பணுக்களின உற்பத்தியைப் பெருக்க இரும்புச் சத்து உதவுகிறதல்லவா? அந்த இரும்புச் சத்தைப் பக்குவப்படுத்தித் தருவது தாமிரச் சத்து. அத்தோடு தசை அணுக்கள் உருவாக்கத் தேவையான 'மையோலின்' தயாரிட்புக்கும் இது உதவுகிறது.

எலும்புகள், நரம்புகள் இரதத்க் குழாய்கள் வலுவாக இருக்கவும், நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடவும், உணவுப் பாதையின் சில நொதியங்களை உற்பத்தியாக்கவும், இரத்தம் உறைவதைத் தடுக்கவும் இந்தத் தாமிரச் சத்து உதவுகிறதாம்!

சோயா, பட்டாணி, சோளம், புளி, பாசிப் பயறு ஆகியவற்றில் கூடுதலாக உண்டு. மண்ணிற்கு அடியில் விளையும் கிழங்குகள், இஞ்சி, வெங்காயம் போன்றவற்றிலும் இத் தாமிரச்சத்து உண்டு.

### மாதர்களுக்கு

கர்ப்ப காலத்திலும் மாதவிலக்கு நாட்களிலும் தாமிரச் சத்து அதிகம் தேவையாம்!

— மயூரன்

# கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் 250 விடுதலைப் புலிகள் கைதாம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் இதுவரை 60 முக்கிய உறுப்பினர்கள் உட்பட 250 விடுதலைப்புலிகள் சுற்றிவளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டுள்ளனராம்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் 12 உயர்தர விடுதலைப்புலி உறுப்பினர்கள் உள்ளதாகவும் அண்மையில் பெருமெடுப்பில் நடாத்தப்பட்ட சுற்றிவளைப்பு, தேடுதல் வேட்டையின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட விடுதலைப்புலிகளில் சிலர் பெரும்பாலும் கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் சிங்கள மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் வீடுகளில் அறைகளை வாடகைக்கு எடுத்திருந்தனராம். இந்த அறைகளுக்கு அவர்கள் ஐயாயிரம் ரூபா வரை வாடகை செலுத்தி வந்தனர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் இரண்டு அல்லது மூன்று மாதத்துக்கும்மேல் ஓரிடத்தில் தங்கியிருப்பதில்லை சந்தேகம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டும் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கும்பொருட்டும் இவர்கள் அடிக்கடி தமது இருப்பிடங்களை மாற்றிக் கொள்கின்றனர் என குற்றப் புலனய்வு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது கொழும்பு நகரில் சுற்றித் திரியும் முக்கிய விடுதலைப்புலிகள்குழு ஒன்றை பிடிப்பதற்கு வலைவிரிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்கள்விரைவில் கைது செய்யப்படுவார்கள் என்றும் அவர்தெரிவித்தார். சி

# பாதுகாப்பு கவுன்ஸில் தினமும் கூடி அடுத்த நடவடிக்கை பற்றி ஆராய்வு

[கொழும்பு)

பாதுகாப்பு கவுன்ஸில் தினமும் கூடி அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வடக்கில் புலிகளுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை மேற்கொள்வதுகுறித்தும் புலிகள் வசமுள்ள விமான எதிர்ப்பு ஏவுகணை குறித்தும் இக் கூட்டங்களில் பிரஸ்தாபிக்கப்படுவதாகவும் எனினும் உறுதியான முடிவுகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கிலா, கிழக்கிலா உடனடியாக படை நடவடிக்கையை மேற்கொள்வது என்பது குறித்தும் சரியானமுடிவு எடுக்கப்படவில்லையாம். புலிகள் வசமிருக்கும் விமான எதிர்ப்பு ஏவுகணையால் விமானப்படை நடவடிக்கை முற்ருக முடக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிற்கு சென்றுள்ள விமானப்படை அதிகாரிகள் குழுக்கள் வந்தபின்பே அரசு புதிதாக கொள்வனவு செய்யவுள்ள நவீன ரக விமானங்கள்பற்றி முடிவெடுக்கப் படுமெனவும்தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை வடக்குகிழக்கில் படைமுகாம்கள் புலிகளின் பாரிய தாக்குதல்களுக்கிலக்காளுல் மேலதிக துருப்புகளை அங்கு எவ்வாறு கொண்டு செல்வது என்பது குறித்தும் பாதுகாப்பு கவுன்ஸில் தீவிரமாக ஆராய்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது. -சி

### ★ சத்துருக்கொண்டான் கிராமத்தில் 1990-ம் ஆண்டு

# குழந்தை, பெண்கள் உட்பட 184 பொதுமக்கள் இராணுவத்தால் சுட்டும், வெட்டியும் படுகொலை

[மட்டக்களப்பு]

சத்துருக்கொண்டான் சம்பவத்திற்கு 40 நாட்களுக்கு முதல் எனது இரு மருமக்கள் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன் பின் எனது மனைவி, மூன்று பிள்ளைகள், ஒரு வயது பேரப் பிள்ளை உட்பட ஏழு பேரப் பிள்ளைகளும் மொத்தம் பதினொருபேரை கடந்த[9-9-90] ஐந்து வருடத்திற்கு முன் இராணுவம் அழைத்துச்சென்றது. இன்று எனது குடும்பத்தில் யாருமே இல்லை. இவ்வாறு கணபதிப்பிள்ளை அருணாசலம் [73 வயது] என்ற வயோதிபர் கண்ணீர்மல்க ஜனாதிபதி ஆணைக்குழுமுன் சாட்சியமளித்தார்,

காணாமல் போனோர் பற்றி விசாரணை செய்யும் ஒய்வு பெற்ற நீதியரசர் கே பாலகிட்ணர் தலைமையிலான ஜனாதிபதி ஆணைக்குழு முன் சாட்சியளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினார்.

சத்துருக்கொண்டான், பிள்ளையாரடி, பனிச்சையடி, கொக்குவில் ஆகிய இடங்களில் 9-9-90 அன்று சிவில் உடையிலும் சீருடையிலும் ஆயுதங்களுடன் வந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்ட 184 பொதுமக்கள் பற்றி ஆணைக்குழு கடந்த திங்கட்கிழமை விசாரணைகளை மேற்கொண்டது.

சத்துருக்கொண்டானைச் சேர்ந்த ஓய்வுபெற்ற மின் அத்தியட்சகர் ஒகஸ்டீன் பிள்ளை பிலிப்புபிள்ளை (வயது 72) சாட்சியமளிக்கையில்: எங்களுடன் எனது 8 வயதுப் பேரப்பிள்ளை இருந்தார். சம்பவதினம் மாலை அவன் வெளியில் விளையாடச் சென்றிருந்தான், விளையாடச் சென்றிருந்த பிள்ளையைக் காணவில்லை என வீட்டுக்கு வெளியே சென்று பார்த்தபோது இராணுவம் பொதுமக்களை கூட்டிச் செல்வதைப் பார்த்தேன், எனது பேரப்பிள்ளையையும் கூட்டிச் சென்றார்கள். நிலைமையை உணர்ந்து நானும் மனைவியும் ஒளித்து விட்டோம்.

இராணுவ முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் திரும்பி வராததால் நானும் மனைவியும் இன்னுமொரு பெண்ணும் இராணுவ முகாமுக்கு அண்மையில்போய் நின்று பார்த்தோம். அப்போது நேரம் இரவு ஏழு மணி இருக்கும். இராணுவ முகாமுக்குள் குழந்தைகள், பெண்களின் அவலக்குரல்கள் கேட்டன. வெடிச்சத்தங்களும் கேட்டன. அந்த அவலக்குரல்களை எங்களால்மேலும் கேட்க முடியவில்லை. பயத்தினால் நாம் வந்துவிட்டோம்,

மட்டு, கொக்குவிலைச் சேர்ந்த கந்தசாமி நாசரட்ணம் (வயது 39) சாட்சியமளிக்கையில்: எனது குடும்பத்திலுள்ள 16 பேர் இராணுவத்தினரால் கொண்டுசெல்லப்பட்டனர்.

மாலை 5 30 மணியளவில் இவர்கள் கொண்டுசெல்லப் பட்டனர். கொண்டுசென்ற சற்று நேரத்தின்பின்னர் இராணுவ முகாமிலிருந்து அவலக்குரல்கள் கேட்டன என்றார்,

தம்பிஐயா கிருபைரட்ணம் (வயது 59) சாட்சியமளிக்கையில்; சம்பவதினம் மேயச்சென்ற மாட்டை வீட்டுக்கு கொண்டுசென்றபோது இராணுவம் வந்தது. நான் காட்டில் ஒளித்திருந்து நடப்பவற்றைப் பார்த்தேன். பின்னர் வீட்டுக்குவந்து பார்த்தபோது எனது மனைவியையும், 14 வயது மகளையும் காணவில்லை. அப்போது நன்றாக இருண்டு விட்டது. இராணுவ முகாமிற்கு அருகில்சென்று காட்டில் மறைந்திருந்து பார்த்தேன். அவலக்குரல்கள் கேட்டன. துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன. பின்னர் தீச்சுவாலைகள் தெரிந்தன. பயத்தினால் திரும்பி வந்துவிட்டேன் என்றார்.

செல்வநாயகம் சிங்கராசா (வயது 29) சாட்சியமளிக்கையில்: எனது குடும்பத்தைச் சேர்ந்த 16 பேர் சத்துருக்கொண்டான் போய்ஸ்டவுண் இராணுவ முகாமில் வெட்டிக் கொல்லப்பட்டனர் என்று தெரிவித்தார்.

பிள்ளையாரடியைச் சேர்ந்த செல்லத்தம்பி தங்கவேல் (வயது 52) சாட்சியமளிக்கையில்: சம்பவத்தில் எனது மனைவி சுப்புலட்சுமி (வயது45) மகன் பிரதீபன் (வயது 7) ஆகியோரை இராணுவம் கொண்டுசென்றது அவர்களுக்கு 5 வருடமாகியும் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்றார். ரிசி

### ★ ஜப்பானில் பல உயிர்கள் தப்பின

# மற்றொரு நச்சுவாயு தாக்குதல் தகுந்த நேரத்தில் முறியடிக்கப்பட்டது!

(டோக்கியோ)

ஜப்பானின் டோக்கியோ சுரங்க ரயில் பாதையில் நிகழவிருந்த 2வது நச்சுவாயுக்கசிவுத் தாக்குதல் தகுந்த நேரத்தில் கண்டுபிடிக்கப்பட்டதினால் பெருமளவுஉயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டது.

டோக்கியோ நகரிலுள்ள பிரதான சுரங்க ரயில் நிலையம் ஒன்றில ஆண்கள் மலசலகூட அறையில் சிறிதாக புகை வருவதை அவதானித்த ரயில் நிலைய ஊழியர் ஒருவர் உடனடியாக பொலிஸாருக்கு தகவலைத் தெரிவித்தார்.

ரயில் நிலையத்துக்கு விரைந்த பொலிஸார், பிளாஸ்ரிக் பை ஒன்றில் இரண்டு குப்பிகள் இருப்பதைக் கண்டதும் அங்கு குழுமியிருந்த நூற்றுக்கணக்கான ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் அப்புறப்படுத்தியதுடன் சுரங்க ரயில் சேவைகளையும் உடன் நிறுத்தினர்.

பையில் இருந்த இரு குப்பிகளையும் பொலிஸார்சோதனையிட்டபோது ஒரு குப்பிக்குள் மாவாக்கப்பட்ட 2 லீட்டர் சோடியம் சயனைட்டும் மற்றொரு குப்பிக்குள் 1½ லீற்றர் கந்தக அமிலமும் இருக்கக் கண்டுபிடித்தனர். இந்த இரண்டு இரசாயனக் குப்பிகளும் ஒன்றுசேர்ந்து எரிந்தால் இதிலிருந்து வெளிவரும் கொடிய நச்சுவாயுவினால் நூற்றுக்கணக்கான மக்கள் மூச்சுத்திணறி பலியாவதுடன் ஆயிரக்கணக்கான மக்கள் எரிகாயங்களுக்கும் உள்ளாக நேர்ந்திருக்கும் என்றும்பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 7 வாரங்களுக்கு முன்பும் டோக்கியோ நகரிலுள்ள மற்றொரு சுரங்க ரயில் நிலையத்தில் நிகழ்ந்த நச்சுவாயுக் கசிவினால் 12 பேர் பலியானதும், ஐயாயிரம் பேர் எரிகாயங்களுக்கு உள்ளானதும் தெரிந்ததே. வி-சி

# பழுதடைந்த இறைச்சி விற்றவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப்பிரிவில் உள்ள மாட்டிறைச்சிக்கடையொன்றில்பழுதடைந்தமுதல் நாள் இறைச்சியை விற்பனை செய்தும், விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்திருந்த கடை உரிமையாளர் ஒருவரை தமிழீழ வலி கிழக்குப் பகுதி உணவு மருந்து பரிசோதகர் திரு: அ. நவரத்தினத்தினால் திடீர்ப்பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டது.

கடையில் விற்பனைக்காகக் கையிருப்பிலிருந்த எஞ்சிய இறைச்சி புதைக்கப்பட்டதுடன், உரிமையாளர் தமிழீழ முதன்மை உணவு அலுவலர் வைத்திய கலாநிதி கா. அருளினால் கடந்த 3ம் திகதி விசாரணை செய்யப்பட்டு தவறை ஒத்துக் கொண்டதன் பேரில் குற்றப்பணம் செலுத்தும்படி பணிக்கப்பட்டுள்ளார்.

# தராசுப் படிகளுக்கு முத்திரையிடும் வேலை

(கொழும்புத்துறை)

யாழ். உரும்பராய் அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் இன்று 8ம்திகதிதிங்கட்கிழமையும், 9ம் திகதி செவ்வாய்க்கிழமையும் காலை 8-30 மணி முதல் பிற்பகல் 2-30 மணி வரை நிறுவைகள், அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடப்படவுள்ளது.

இப்பகுதி சகல வர்த்தகர்களும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நிறுவைகள் அளவைகள் உபகரணங்களுக்குத் தவறாது முத்திரையிட்டுச் செல்லவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவைகள் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடத் தவறுவோர்மீது திணைக்கள அதிகாரிகள் தகுந்தசட்ட நடவடிக்கை எடுப்பர் என்று யாழ். செயலக நிறுவைகள்-அளவைகள் திணைக்களப் பரிசோதகர் திரு. க. ஜெ.ரூபேந்திரன் தெரிவித்துள்ளார்

சகல பேக்கரி, மில் உரிமையாளர்களும் தவறாது தங்கள் நிறுவைகள்- அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிட வேண்டுமென அவர் அறிவித்துள்ளார். 154-ரி

# சகல அரசாங்க ஊழியர்க்கும் சுகாதார காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி திருமதி சந்திரிகாவின விசேட பணிப்பின்பேரில் இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனம், அரசாங்க ஊழியர்களுக்கு புதிய சுகாதாரக் காப்புறுதித் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது.

4 லட்சத்து 50 ஆயிரத்திற்கு மேற்படாத இந்தகாப்புறுதித் திட்டம், சகல அரசாங்க ஊழியர்களுக்கும் கட்டாயமாக்கப் பட்டுள்ளது.

இத் திட்டத்தின்படி, காப்புறுதி செய்யும் சகல அரச ஊழியர்களின் மனைவி அல்லது கணவன். 12வயதுக்குட்பட்ட வேலையில்லாமலிருக்கும் பிள்ளைகள். 70 வயதுக்குமேற்பட்ட பெற்றோர், வேலையில்லாமலிருக்கும் சகோதரர்களுக்கும் காப்புறுதிப் பத்திரம் வழங்கப்படும்.

காப்புறுதி செய்யப்படும் அரச ஊழியருக்கு வைத்திய செலவுக்காக வருடாந்தம் 22 ஆயிரம் ரூபா வழங்கப்படும், பிரசவ காலத்தில் பெண் ஊழியர் ஒருவருக்கு இழப்பு ஏற்படும் பட்சத்தில் அவருக்கு நஷ்டஈடு வழங்கப்படும். வாகன விபத்துகளிலும், கலவரங்களிலும் காயப்படுபவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்படும்.

காப்புறுதிப்பத்திரம் பெறும் அரசாங்க ஊழியர் ஒருவர் சிகிச்சைக்காக அரசாங்க ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டால் அவருக்குநாளாந்தம் 150 ரூபா வீதம் வழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. வி-சி

# மருந்துவகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு

(கொழும்புத்துறை

யாழ். போதனா வைத்திய சாலையில் சில முக்கியமான மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை வைத்தியசாலை மெடிக்கல் கிளினிக்கில் மருந்து எடுக்கச் சென்ற நோயாளர்களுக்கு பனடோல் உட்பட வேறு சில மருந்துகள் முடிந்து விட்டது என்றும், வெளியில் வேண்டி பாவிக்கும் படியும் மருந்தாளர்கள் கூறியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மேலும் கிளினிக் பகுதியினல் மட்டையில் மருந்து வகைகள் குறைவாக உள்ளதால் டாக்டர் எழுதிய மருந்தில் அரைவாசி மட்டும் வழங்கப்படும் என்றும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. [154-ரி-சி

# இலங்கை கடற்படைக்கு அஞ்சி

## தமிழக மீனவர் வேறிடம் செல்கின்றனர்

(சென்னை)

இலங்கை கடற்படையினரின் தொடர்ச்சியான தாக்குதலுக்கு அஞ்சி இராமேஸ்வரம் மீனவர்கள் பாதுகாப்பான பகுதிகளில் மீன்பிடிப்பதற்காக தங்கள் படகுகள் சகிதம் வேறு கடற்பகுதிகளுக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக இராமேஸ்வரம் கடற்தொழிலாளர் சங்கம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது, அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை கடற்படையினர் கடந்த பல வருடங்களாக தமிழக மீனவர்கள் மீது மிக மோசமான தாக்குதல்களை நடாத்தி வந்துள்ளனர். இதனால் நூறுக்கும் மேற்பட்ட மீனவர்கள் உயிரிழந்ததுடன் 200 பேர் வரை படுகாயமடைந்துள்ளனர். இதில் 15 பேர் வரை உடல் முற்றாக ஊனமுற்ற நிலையில் எழுந்து நடமாடமுடியாதுள்ளனர்.

இலங்கை கடற்படையிடமிருந்து மீனவர்களை காப்பாற்றுமாறு இந்திய அரசிடமும், தமிழக அரசிடமும்

(5-ம் பக்கம்பார்க்க)

# ம. எண்ணை விநியோகம்

(அரியாலை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல பலநோக்கு கூட்டுறவு சங்க கிளைகளிலும் பங்கீட்டு அட்டைக்கு 3 லீற்றர் ம, எண்ணை லீற்றர் 20ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகின்றது. 59

# கோழி வளர்ப்பு

(அரியாலை)

யாழ், மாவட்டத்தில் கோழி வளர்ப்பு குடிசைக் கைத்தொழிலாக மாறியுள்ளது. இடம் பெயர்ந்தோர்கள் வாழும் அகதி முகாம்களிலும் இடம் பெயர்ந்தோர் வாழும் தனியார் வீடுகளிலும் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. 59

## செஞ்சிலுவை சங்க நாள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளைத் தலைமையகம் நடத்தும் உலக செஞ்சிலுவை சங்க தினம் இன்று 8ம் திகதி செஞ்சிலுவைச் சங்க தலைமையகத்தில் நடாத்தப்படவுள்ளது. இன்று காலை யாழ். போதனா வைத்திய சாலையில் தொண்டர்களால் இரத்த தானம் செய்யப்படவுள்ளது. பகல் 11-00மணிக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்க கல்வி நிலையத்தில் கருத்தரங்கும் பிற்பகல் 4-00 மணிக்கு திருநெல்வேலி இந்து மன்ற சிறுர் இல்லத்தில் மருத்துவர்களினுல் அங்குள்ள சிறுர்களுக்கு இலவச மருத்துவ சேவையும் நடைபெறவுள்ளது. ரி

# வலிமேற்கு பகுதியை நோக்கி தினமும் இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல்

(வட்டுக்கோட்டை)

வலி. மேற்கு பிரதேசத்தில் சுழிபுரம், தொல்புரம், சில்லாலை, பணிப்புலம், சித்தன்கேணி, மூளாய், பொன்னுலை, வட்டுக்கோட்டை, அராலி, சங்கானை பகுதிகளில் இரவு நேரத்தில் தினமும் ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

பலாலி, மாதகல் காரைநகர், ஊர்காவற்றுறை, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் நிலை கொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரே மேற்படி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

மேற்படி பகுதிகளில் வசிக்கும் மக்கள் இரவு நேரங்களில் ஷெல் வந்து விழும் என்ற பீதியுடனேயே வாழ்ந்து வருகின்றனர்.

இராணுவத்தினரால் ஏவப்படும் ஷெல்கள் பெரும்பாலும் வயல்வெளிகளிலும் பற்றைக்காடுகளிலும் விழுந்து வெடிப்பதனுல் உயிர்ச்சேதங்களின்றி குறைந்த சேதங்களுடன் மககள் தப்பித்துக் கொள்ளக்கூடியதாகவுள்ளது.

குடிமனைகளில் விழுந்து வெடித்த ஷெல்துண்டுகள் பல வீடுகளிலும் முற்றங்களிலும் விழுந்துள்ளன. இதனுல் பாரிய சேதங்கள் ஏற்படாதுவிட்டாலும் பலரைப் பீதியடையச் செய்துள்ளன.

ஷெல் குண்டுகளின் சத்தத்தினுல பல குழந்தைகள் வியாதிக்கு உளளாகியுள்ளனர். 139-ரி

## நேற்றும் ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றும் குடாநாட்டின் பல பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்ஷெல் தாக்குதலினுல் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

## உயிலங்குளம் புனரமைப்பு

(யாழப்பாணம்)

வன்னி மாவட்டம் துணுக்காய் பிரதேசத்திலுள்ள உயிலங்குளம் அண்மையில் தேச நிர்மாணிகளால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

நீர்வளம் பேணும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்ட துரித நீர்வள மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இத்திருத்த வேலைகளின் போது குளத்தின் அணைக்கட்டுகள் வலுவூட்டப்பட்டதுடன் இதன் வான பாயும் பிரதேசத்தில் காணப்பட்ட காடுகளும் துப்பரவு செய்யப்பட்டன.

இப்புனரமைப்பு நடவடிக்கைகளின் மூலம் இக்குளத்தில் 500 ஏக்கர் அடி நீரைச்சேமிக்கக்கூடியதாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பல்கலை மாணவர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களிற்கான அவசரப் பொதுக்கூட்டம் இன்று காலை 10-00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது. அனைத்துப் பீட மாணவர்களும் தவருது சமூகமளிக்கும் படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ரி

# கடும் மழையினுல் விவசாயபயிர் அழிவு

(வடமராட்சி)

கடும் மழையால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலுமுள்ள வெண்காயம், புகையிலை போன்ற பணப்பயிர் உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, வலிகாமம், ஆவரங்கால், புத்தூர், நீர்வேலிப் பகுதியில் பெருமளவு தோட்டங்கள் எங்கள் எஙகும் ஒரே வெள்ளமாகக் காட்சியளிக்கின்றன.

மேற்படி இடங்களிலுள்ள வெண்காயம், புகைபிலைப் பயிர்கள் வெள்ளத்தில் அமிழ்ந்தும் பழுதடைந்துள்ளன. (51-ரி)

## 12 ஏவுகணை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தாண்டுகளாவது இந்த ஏவுகணைகள் விடுதலைப் புலிகளிடம் இருந்திருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்

விமானம் தாக்கும் ஏவுகணைகளில் விடுதலைப் புலிகளுக்கு இந்தியாவில்தான் பயிற்சி அளிக்கப்பட்டது அதுவும் இந்தியப்படைகள் இலங்கை செல்ல முன்னர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்

ஆனுல் விடுதலைப்புலிகளுக்கு இப்பொழுது எப்படி ஏவுகணை கிடைத்தது என்பது பற்றி ஒருவரும் உறுதியாக கூறமுடியவில்லை.

ஆப்கானிஸ்தானில் அல்லது உக்ரேனிலிருந்து வந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. ரி

## இரட்டைச் சூட்டடுப்பு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டு மக்களின் நன்மை கருதிதமிழீழபொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப்பகுதியால் இந்த வருடம் தை மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரை 912 சிக்கள இரட்டை சூட்டடுப்பும் 18 உயர் சமையல் அடுப்பும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த இரட்டை சூட்டடுப்பு பாவனையால் மக்களுக்கு விறகுச்செலவும், சமையலின் நேரமும் குறைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மீனவர் கைது விவகாரம்: மாலைதீவுடன் ஒப்பந்தம்

(கொழும்பு)

இலங்கை மீனவர்கள் மாலைதீவு கடலில் மீன்பிடிக்கும் போது அந்நாட்டுப் படை அதிகாரிகளால் கைதுசெய்யப்படும் விவகாரம் தொடர்பாக மாலைதீவு அரசுடன் ஒப்பந்தம்செய்வதற்கு இலங்கை அரசு தீர்மானித்துள்ளது.

மாலைதீவு அரசுடன் நிரந்தரமான நீண்டகால உடன்பாடு ஒன்றை செய்யும் சாத்தியம் பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது.

பெருமளவு இலங்கை மீனவர்கள் தற்போது மாலைதீவுச் சிறைச்சாலையில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

அரசுக்கு இது பெரும் பிரச்னையாகவுள்ளது. இவ்விவகாரம் குறித்து மாலைதீவு அரச அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதற்கு இலங்கை அமைச்சர் ஒருவர் மாலைதீவுக்குச் செல்லவுள்ளார். (ரி

## பலாலி, பூநகரி

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரான இறுதி தாக்குதல் நடாத்துவதன் மூலமே விடுதலைப் புலிகளின் முற்றுகையை முறியடிக்க இயலும் என்ற நிலையில் இத்தாக்குதலை இராணுவம் நடாத்த அரசு அனுமதி தரவேண்டும். அல்லது முகாம்களை கலைத்துவிட்டு இராணுவம் வெளியேற அரசு உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென பெயர் கூறவிரும்பாத இராணுவத்தளபதி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை எந்த நேரத்திலும் தமது முகாம்கள் மீது விடுதலைப்புலிகளின் தாக்குதல் தொடரலாம் என்ற அச்சத்தில் படையினர் தமது நாட்களை எண்ணிக்கொண்டிருக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. ரி

## விவசாயிகளுக்கு கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

விவசாயிகளின் நன்மை கருதி அவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்றை முல்லை மாவட்ட நெடுங்கேணி மட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அண்மையில் நடத்தினர்.

இக்கலந்துரையாடலில் விதைப்புக்கான தவணை தப்புதலால் ஏற்படும் பிரச்னைகள் பற்றியும், வாய்க்கால் குளங்கள் துப்பரவு செய்யாமையால் ஏற்படும் இடையூறுகள் பற்றியும் கிருமி நாசினி பாவிக்கும் முறைகள் பற்றியும் விளக்கங்கள் கொடுக்கப்பட்டன.

## மீள அறவீட்டு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கண்காணிப்பின் கீழ் வழங்கப்பட்ட கால போக நெற்செய்கைக்கான உள்ளீடுகளுக்காக வழங்கப்பட்ட கடன்களுக்கான மீள் அறவீட்டு நடவடிக்கைகள் தற்போது முல்லை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

நெடுங்கேணி வட்ட கிராமிய உற்பத்திக் குழுக்களூடாக வட்டத் தொடர்பாளரின் மேற்பார்வையின் கீழ் கடந்த ஆண்டு 220 பேருக்கு இவ் உள்ளீடு விநியோகம் கடனடிப்படையில வழங்கப்பட்டிருந்தது.

# புலிகள் இயக்கம் உலகில் சக்திமிக்க போராட்ட அணி

[லண்டன்]

விடுதலைப் புலிகள்தான் உலகிலே மிகவும் சக்திவாய்ந்த போராட்ட படையணியாக 12 வருட உள்நாட்டு போரில் வெற்றியை அண்மித்த அமைப்பாக உள்ளது என லண்டனில் இருந்து வெளிவரும் த இன்டிபென்டன் பத்திரிகையாளர் றிம்மைக்கேக் தனது கட்டுரையொன்றில் தெரிவித்துள்ளார்.

இவர் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் கழுத்தில் சயினைட் வில்லை அணிந்த இளைஞர்கள் வழிநடத்தும் நாடு ஒன்றினை கற்பனை செய்து பார்த்தால் அதுபோலவே யாழ்ப்பாணம் இருக்கும். அங்கு நிலவும் தூய்மை அதிசயிக்கத்தக்கது.

விடுதலைப்புலிகளின் வீரம் செறிந்த மகளிர் படையணி பின் வாங்கியதே கிடையாது இப்படையணியினர் பெண்கள் என்பது மட்டுமல்ல அவர்களின் வயதும் அவதானிகளை அதிசயிக்க வைக்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளார். ரி

## பலாலி முகாமில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்கள் அனுப்புவதில் அரசாங்கம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

இன்னமும் பலாலிக்கு விமான சேவை ஆரம்பிக்கவில்லை. வடபகுதி முகாம்களைச் சுற்றி விடுதலைப்புலிகள் சூழ்ந்து நிற்கிருர்கள் என்று தகவல்களும் கிடைத்துள்ளன.

இருந்தபோதிலும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பாரிய இராணுவநடவடிக்கை எடுப்பதற்கு உயர் அதிகாரிகளிடமிருந்து எந்த உத்தரவும் கிடைக்கவில்லை. அப்படி நடவடிக்கை எடுக்காது போனுல் விடுதலைப் புலிகளின் முகாம்களுக்கு குண்டுத்தாக்குதல் நடத்தவேண்டும். ஒவ்வொரு விளுடியும் எங்களுக்கு கஷ்டமான நிலை தான்,

இது பற்றி படை உயர் அதிகாரிகள் சிந்திப்பதாக இல்லை இப்பொழுது புதினப் பத்திரிகைகள் கூட எங்களுக்கு கிடைப்பதில்லை என்று அந்த அதிகாரி தெரிவித்ததாக அமல் ஜெயசிங்க தெரிவித்தார்.

இதேவேளை விமானப்படை செயலிழந்ததால் வடக்கில் பாரிய இராணுவநடவடிக்கை எடுக்க முடியாதிருக்கின்றது என்று கொழும்பில் உள்ள இராணுவ அதிகாரி தெரிவித்தார் என்று பி. பி. சி. தெரிவித்தது.

இராணுவ நடவடிக்கையின் போது காயப்படும் இராணுவ வீரரை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்வதற்கு ஹெலிகப்டர் உபயோகிக்கவேண்டும் இவ்விதம் சாத்தியப்படாது போனுல், வெளிநாடுகளில் உதவியைக் கோரவேண்டும் என்று அந்த இராணுவ அதிகாரி தெரிவித்ததாக பி. பி. சி. மேலும் தெரிவித்தது. ம-ரி

## கடற்படைக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பார்ப்பிற்காக இங்கு வருகின்றன. கொழும்பிலுள்ள துறைமுகம் பழுது பார்ப்பு வேலைகளுக்கு மிகவும் பிரசித்தி வாய்ந்ததாகும்.

கடந்த ஆண்டு இங்கு சுமார் 100 கப்பல்கள் வந்தன எனவும் தெரிவிக்கப்படுகிறது. -சி

## இலங்கை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அளவே இல்லை. ஆனுல் இருஅரசுகளும் வெறும் அனுதாபங்களை தெரிவித்தனவேயன்றி மீனவர்களை பாதுகாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

இந்நிலையில்தமிழக மீனவர்கள் உயிர் பிழைக்க வேண்டுமென்ருல் வேறு கடற்பகுதிகளுக்கு செல்வதை தவிர எமக்கு வேறு வழி இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த அறிக்கைகள் தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (சி)

## பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

விவசாய விரிவாக்கஅறிவை மேம்படுத்தும் நோக்கோடு மன்னுர் மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் விவசாய பயிற்சி வகுப்பொன்று அண்மையில் நிறுவன செயலகத்தில் நடாத்தப்பட்டது.

விவசாய போதனுசிரியர்கள், பெரும்பாக உத்தியோகத்தர்கள், கிராமிய உற்பத்திக்குழு வட்டத் தொடர்பாளர்கள் மற்றும் நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்ட இப்பயிற்சி வகுப்பில் சரியான பசளை பாவனை, திருந்திய செயல்முறை பயிற்செய்கைபோன்ற விடயங்கள் பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

## யாழ். குடாவில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீழ்த்தப்பட்டதை யடுத்து வடபகுதி முகாம்களுக்கு துருப்புகள் அனுப்புவது மற்றும் உணவுப் பொருட்கள் அனுப்புவதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்தது.

இதேவேளையில் பலாலி இராணுவ முகாம், மற்றும் பூநகரி இராணுவ முகாமில் நிலைகொண்டுள்ள படையினர் விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள்ளாகியுள்ளதாக ஏஜென்சி செய்தி ஒன்று நேற்று தெரிவித்தது.

படையினருக்கான விநியோகங்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் மேற்படி முகாம்களில் உள்ள படையினரின் மனோநிலை பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

படையினருடனுன நேரடித் தொடர்புகள் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருப்பதனுல் புலிகளின் தாக்குதல்கள் தொடரும் பட்சத்தில் எப்படி சமாளிப்பது என படையினர் கலக்கமடைந்துள்ளனர். க-ரி

## புலிகளிடம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ளது.

இந்தியாவிலுள்ள விடுதலைப் புலிகளுடன் தொடர்புகொண்டவை என்று அறியப்படும் மக்கள் போராட்டக் குழு போன்ற முக்கிய தீவிரவாதக் குழுக்களின் கைகளில் இம்மாதிரியான ஏவுகணைகள் சென்றடைந்துவிடக்கூடாது என்று இந்தியப் பாதுகாப்பு ஏஜென்ஸிகள் கவலைப்படுகின்றன என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (ரி)

## சண்டே லீடர் குற்றச்சாட்டு

சென்ற ஆண்டு இறுதியில் விமானம் தாக்கும் ஏவுகணைகளை விடுதலைப் புலிகள் வாங்க இருக்கிருர்கள் என்ற உளவுத்துறையின் அறிக்கைகளை பாதுகாப்பு அமைச்சகம் கண்டு கொள்ளாது புறக்கணித்துவிட்டது என்று 'சண்டே லீடர் தெரிவித்துள்ளது.

இரண்டு விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதை இராணுவம் மிகவும் எதிர்பார்த்திருக்வேண்டும் என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. ரி

# முல்லைத்தீவில் புலிகளுக்கு விமான ஓடுதளம் இராணுவ இலக்குகளை விரைவில் தாக்கலாம்

## - புலனாய்வு அதிகாரிகள் தெரிவிப்பு -

[சென்னை]

இலங்கையில் வடமாகாணத்திலுள்ள முல்லைத்தீவுப் பகுதியில் விடுதலைப்புலிகள் விமான ஓடுபாதை ஒன்றை நிர்மாணித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைகளை ஆதாரம் காட்டி அகிலஇந்திய வானொலி நேற்று தெரிவித்தது.

புலனாய்வு அறிக்கைகள் மூலம் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் இந்த விமான ஓடுதளம் முல்லைத்தீவு காட்டுப்பகுதியை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது உலகமகா யுத்தத்தின்பின் முல்லைத்திவுப் பகுதியில் பிரிட்டிஷ் அரசினால் கைவிடப்பட்ட விமான ஒடுபாதையில்இந்தஒடுபாதை அமைக்கப்பட்டிருக்கலாம் எனவும் புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இந்த ஓடு தளத்திலிருந்து புலிகள்இராணுவ முகாம்கள் மீதும்குறிப்பிட்ட சிவிலியன் இலக்குகள்மீதும் ''கிளைடர்'' விமானங்கள் மூலம் தாக்குதல்களை நடாத்தலாம் —

எனவே அரசு இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென பாதுகாப்பு புலனாய்வு அறிக்கைகளில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இ

### அகதிகள் பாதிப்பு

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது பெய்துவரும் மழையினுல் யாழ். பண்ணைவீதி-யாழ். பிரதானவீதி ஆகிய இடங்களிலுள்ள இடிந்த கட்டிடங்களில் வசிக்கும் அகதிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (59)

### திருமலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் ஒருவர் காயமடைந்ததாகவும் படைவட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

கிழக்குமாகாணத்தில் படையினருக்கு எதிரான விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அண்மையில் அதிகரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. க-ரி

# சுற்றிவளைக்க வந்த படையினரை விடுதலைப்புலிகள் விரட்டியடித்தனர்

## ராணுவம் சுட்டு 6 பொதுமக்கள் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு திகிலவெட்டைப் பகுதியைச் சுற்றிவளைக்கும் நோக்கில் பெரும் எடுப்பில் வந்த அரச துருப்புகள் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் பல படையினர் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து படையினர் பலத்த இழப்புக்களுடன் முகாம் திரும்பும் வழியில் ஆறு பொதுமக்களைச் சுட்டுக் கொன்றனர்.

மேற்படி சம்பவத்தின்போது சுப்பிரமணியம் சுரேஷ் (18 வயது. மட்டு. மொறக் கொட்டாஞ்சேனை), நவரட்னம் நாதன் (23வயது சந்திவெளி), மயில்வாகனம் தங்கவேல் 24வயது சந்திவெளி தியாகராசா காளிக்குட்டி (22 வயது சந்திவெளி). விநாசித்தம்பி வேலுப்பிள்ளை [50 வயது சந்திவெளி], சாமித்தம்பி வடிவேல் [24 வயது சந்திவெளி] ஆகியோரே படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவார்.

கிழக்கில் தமிழர் வாழும் பகுதிகள் மீது படையினர் அடிக்கடி சுற்றிவளைப்புகளை மேற்கொண்டுவருவதனையடுத்தே விடுதலைப்புலிகள் இவ் அதிரடித் தாக்குதல்களை மேற்கொண்டனர் என தெரியவருகிறது.

படையினரின் இச்சுற்றிவளைப்பின்போது பெருமளவு தமிழர்கள் கைது செய்யப்பட்டு முகாம் கொண்டு செல்லப்படும்வரை அங்கு பலமாக தாக்குதலிற்குள்ளாவதும் ஏற்கனவே தெரிந்தவையே.

இம்மோதலில் போது விடுதலைப்புலிகளால் ஜி. பி. எம். ஜி. இணைப்புகளுடன் ரவைகள் - 150, இராணுவ பைகள்- 02. இராணுவமழைக் கவசங்கள் - 02. தண்ணீர் தாங்கி - 02 ஆகிய ராணுவ தளபாடங்கள் விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதலில் வீர வேங்கை விக்கிரமன் குலசேகரன் கணேஸ் - பட்டுநகர் என்னும் விடுதலைப்புலிப் போராளி ஒருவர் வீரச்சாவ அடைந்தார். க-ரி

# இராணுவ உளவுத்துறை பெரும் திண்டாட்டம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு ஏவுகணைகள் கிடைத்திருப்பதால் ஏற்பட்ட புதிய அபாயத்தை எப்படிச் சமாளிப்பது என்று இராணுவ உளவுத்துறைக்கு உறுதியாகத் தெரியவில்லை என்றுசண்டே ஒப்சேவர் தெரிவித்துள்ளது.

இதற்குக் காரணம் எப்படிப்பட்ட ஏவுகணை என்று அறியாததே என்று சன்டே ஒப்சேவர் உட்பட பல பத்திரிகைதள் செய்தி வெளியிட்டுள்ளன. (ரி)

# ரூபவாஹினி தலைவர் வசந்தராஜா நெருக்கடியால் ராஜினுமா செய்ய முடிவு

(கொழும்பு)

இலங்கையில் தற்பொழுது உருவாகியுள்ள போர்ச் சூழலின் விளைவாக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு கொடுக்கப்பட்டுவரும் நெருக்கடிகளினுல் ரூபவாஹினி தலைவர் வசந்தராஜா தனது பதவியிலிருந்து விலக முடிவு செய்துள்ளார்.

தன்னை இராஜினுமா செய்யும்படி அரசு கேட்கவில்லை என்றும் இது தன்னுடைய சொந்த முடிவு என்றும் அவர் தெரிவித்துள்ளார். ம ரி

# வீதித்தடையை மீறியவாகனங்கள் மீது பொலிஸார்துப்பாக்கிச்சூடு; இருவர் பலி!

## பலாங்கொடையில் சம்பவம்!!

(கொழும்பு)

வீதித்தடைகளையும் பொலிஸாரின் உத்தரவுகளையும் மீறி சென்ற வாகனம் ஒன்றின் மீது பொலிஸார் துப்பாகிப் பிரயோகம் செய்துள்ளனர்.

இந்தச்சம்பவம் நேற்று முன்தினம் பலாங்கொடையில் இடம்பெற்றது: பலாங்கொடை பொலிஸார் இத்த வாகனம் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் இருவர் பலியாகியுள்ளனர். படுகாயமடைந்த மூவர் பலாங்கொட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்,

இந்தச் சம்பவத்தில் பலியானவர்களில் ஒருவர் பொலநறுவையைச் சேர்ந்த அபேயரணசிங்க முனியான் செலாகே என அடையாளம் காணப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட 'ஹைஏஸ்' வானிலிருந்து இரண்டு கிரனைட் கைக்குண்டுகளும், துப்பாக்கி ஒன்றையும் பொலிஸார் மீட்டுள்ளனர்:

இந்த வானில் வந்தவர்கள் மிகப்பெரிய கொள்ளை ஒன்றை நடத்த திட்ட மிட்டு வந்திருப்பர் என பலாங்கொடை பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார். வானில் வந்த இந்த கோஷ்டியினர் வரும் வழியிலபொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரைக் கடத்தியதாகவும் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் அவரும் காயமடைந்ததாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். இ

# இலங்கை அரசு சமாதான முயற்சிகளைத் தொடர வேண்டும்

## — பிரணுப் முகர்ஜி

(சென்னை)

இலங்கையில் அமைதி ஏற்பட இலங்கைஅரசு சமாதான முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டுமென இந்தியா விரும்புகிறது.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. பிரணுப் முகர்ஜி இவ்வாறு தெரிவித்துள்ளார்,

பி. ரி. ஐ. செய்திநிறுவனத்துக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் திரு முகாஜி மேலும் தெர்வித்துள்வதாவது:

அண்மையில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதல்களையடுத்து இலங்கை அரசு இந்தியாவிடமிருந்து இராணுவ உதவிகள் எதையும் கோரவில்லையெனவும் தெரிவித்தார். (இ]

# கொழும்பு-மட்டு. ரெயில்மீது துப்பாக்கிப் பிரயோகம்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயில் வண்டி மீது இனம் தெரியாத ஆயுதபாணிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இராணுவ உயர் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

தேவாபுரம் ரயில் நிலையத்திற்குச்சமீபமாக ரயில் சென்று கொண்டிருந்தபோது மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் இடம் பெற்றதாகவும் இத்தாக்குதலினுல் எவருக்கும்காயமேற்படவில்லை என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

குறிப்பிட்ட ரயில் நிலையப் பகுதி படையினரின் சுற்றிவளைப்பிற்கு உள்ளாக்கப்பட்டு கடும் சோதனைக்கு உள்ளாக்கப் ட்டதாகவும் அறியப்படுகிறது. க-ரி

# ★ இனப்பிரச்னைத் தீர்வுக்கு முன் தமிழரின் கஷ்டங்கள் தீர்க்கப்பட வேண்டும்

(கொழும்பு)

இனப் பிரச்னைத் தீர்வுக்கு முன்னேடியாகத் தமிழ் மக்களின் கஷ்டங்கள் தீர்த்து வைக்கப்படவேண்டும் என நான்கு தமிழ்க் கட்சிகள் ஜனுதிபதி சந்திரிகாவுக்கு கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பான தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையும் ஜனுதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, புளொட் அரசியல் பிரிவு, மலையக மக்கள் முன்னணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈபி டி பி) ஆகியகட்சிகள்கொழும்பில்கூடி ஜனுதிபதிக்கு தமிழ்மக்களின் கஷ்டங்கள் தொடர்பாக மகஜர் ஒன்றை அனுப்பி வைத்துள்ளன.

இது தொடர்பாக ஜனுதிபதியை நேரில் சந்தித்துப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தருமாறும் ஜனுதிபதியை இக் கட்சிகள் கேட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடிய இக்கட்சிகள் தற்போதை நிலைகுறித்து நீண்ட நேரம் கலந்துரையாடின.

இக்கலந்துரையாடலில் ஏழு முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கலந்துரையாடலின் பின்னர் தமிழ் மக்களின் தற்போறைய நிலவரம் குறித்து ஜனுதிபதியைச் சந்தித்துப் பேசுவதெனவும் முடிவு செய்யப்பட்டது. க ரி

### முல்லைத்தீவிலும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பியோடி விட்டனர்.

விடுதலைப்புலிகள் தரப்பில் எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லை;

இத்தாக்குதலின் போது ரி 56 இரண்டு ரக துப்பாக்கி -1, ரி 56 ஒன்று ரக துப்பாக்கி-1, எம் 70 குண்டுகள் -4, நடுத்தர ரவைகள் 414, ஏ. கே. ரவைக்கூடுகள் -8, சாப்பாத்து ஒருசோடி, இராணுவப்பெட்டி -1, தண்ணீர்த் தாங்கி-1, ஆகிய இராணுவ தளபாடங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றினர். ரி

# பலாலி முகாமிலிருந்து வடமராட்சி நோக்கி ஷெல் தாக்குதல்

(வடமராட்சி)

பலாலி இராணுவ முகாமில் இருந்து வடமராட்சி நோக்கி நேற்றுமுன்தினம் இரவு 8-45 மணியளவில் பயங்கர ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது-

இச்ஷெல்க்குண்டுகள் வல்லைவெளி, தோப்பு துவாளி அம்மன் ஆலயப் பின்புறம் தூப்புலம் வைரவர் கோவில் புறுப்பொறுக்கி ஆலடி போன்ற பகுதிகளில் விழுந்து வெடித்தன.

இதன் காரணமாக அப்பகுதி மக்கள் இரவோடு இரவாக பாதுகாப்புத்தேடி இடம் பெயர்ந்தனர்.

பெருமளவான பனை தென்னை போன்ற மரங்கள் விழுந்து முறிந்துள்ளன.

படையினரின் கண்மூடித்தனமான இச்ஷெல் வீச்சினுல் மக்கள் சிதறி அச்சத்துடன் தமது இராப் பொழுதை கழிக்கின்றனர். 51-ரி

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995ம் ஆண்டு மே மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Neaws paper at the General Post office Sri Lanka under Licence number B/1633613.